# உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை. திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,

ந.க.எண். 701/2021 நாமா நாள்.02.08.2021.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு – நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம்– திருச்செங்கோடு வட்டம் – எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம் – முசிறி ஊராட்சி/கிராமம் – சர்வே எண்.123/2A–ல் 3.025 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 04.05.2017
2. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 05.02.2019.
5. அரசாணை எண்.100 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(3))த் துறை நாள்.01.07.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். 13193/2017/LA2 நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
7. மனுதாரர் திரு.எம்.ராமசாமி, முசிறி அவர்களின் ஆன்லைன் எண்.DTCP/L/0828636/2017, விண்ணப்பம் நாள். 10.02.2021.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.22.04.2021 மற்றும் 30.04.2021.

**********

**உத்தரவு:**

பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 6–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 7–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 8–ல் கண்ட கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், முசிறி ஊராட்சி/கிராமம், சர்வே எண்.123/2A–ல் 3.025 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ(வரன்முறை)/ நாமா எண்.42/2021 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

119

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 3.025 ஏக்கர் அல்லது 131769.00 ச.அடி |
| சாலைகளின் மொத்த பரப்பு | : | 29998.00 ச.அடி |
| மொத்த மனைகள் | : | **70 எண்ணம்** |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | **34 எண்ணம்** |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 1-7, 24-31,36,38-47, 53-55 மற்றும் 66-70. |
| விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | **51558.75 ச.அடி** |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 35 எண்ணம் |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 8-12,18-23,32-35,37,48-52 மற்றும் 56-65. |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | : | 48227.25 ச.அடி ~4480.31 m² |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | | |
| ஏற்கனவே உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பூங்காவின் பரப்பு | | |
| பூங்கா (மனை எண்.17) | : | 1080.00 ச.அடி |
| தற்போது ஒதுக்கப்பட்ட பூங்காவின் பரப்பு பூங்கா (மனை எண்.14,15,16) | : | **4323.50** ச.அடி |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

**1)** பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.**500/–** வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் **35** மனைகளுக்கு ரூ.**17,500/-** செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

**2)** அனுமதியற்ற இம்மனைப்பிரிவுக்கு வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய உரிய கணக்குத் தலைப்பிலும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கி கணக்கிலும் செலுத்தல் வேண்டும்.

**3)** வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வரன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுததமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை **1, 2, 3, 4** மற்றும் **5–ல்** சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. இம்மனைப்பிரிவில் அரசு புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
5. மனைப்பிரிவின் ஊடே Tower Line, HT Line, LT Line and Power Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.
6. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. அரசாணை எண்.100 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.01.07.2019–ல் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்ற வேண்டும். மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதி மனுதாரரால் தானமாக சம்மந்தப்பட்ட துறையில் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பார்வை 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகிய அரசாணைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
9. சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்படவில்லை எனில் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன் அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

**பெறுநர்,**

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

123

நகல்

1. தலைவர்,
முசிறி கிராமம்,
எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

2. திரு.எம்.ராமசாமி மற்றும் ஒருவர்,
த/பெ.முத்துசாமி,
கதவு எண்.4/77 முசிறி,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

3. Tamil Nadu Real Estate Regulatory
Authority (TNRERA),
No:1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore,
Chennai – 600 008.

4. சார்பதிவாளர்,
வேலகவுண்டம்பட்டி
சார்பதிவாளர் அலுவலகம்,
நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.
} சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

5. உதவி இயக்குநர் (நில அளவை),
நாமக்கல் மாவட்ட ஆட்சியர்
அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.
} சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.

6. இருப்புக் கோப்பு

(12)

எலச்சிபாளையம் வட்டாரம் வட்டார வளர்ச்சி அலுவலரின் (கி.ஊ) செயல்முறைகள்
பிறப்பிப்பவர் திரு.ஜே.அருளப்பன்.M.A.,B.L.,

ந.க.எண்.3424/2021/தி2 நாள் –13 .12.2021

பொருள் அனுமதியற்ற வீட்டு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் – எலச்சிபாளையம் வட்டாரம் – முசிறி ஊராட்சி –சர்வே எண். 123/2A, -ல் 3.025 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான ஒப்புதல் வரப்பெற்றது – 30 எண்ணிக்கையிலான தனி மனைகளை வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1) அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் – 04.05.2017.
2) அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை, நாள் – 13.10.2017.
3) அரசாணை (நிலை) எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்(ந.வ.4(3)) துறை, நாள் – 02.05.2018.
4) அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்(ந.வ.4(3)) துறை, நாள் – 05.02.2019.
5) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம், ந.க.எண்.701/2021/நாமா, நாள் –02.08.2021.
6) திரு.எம்.ராமசாமி த/பெ முத்துசாமி, 4/77 முசிறி, திருச்செங்கோடு வட்டம் என்பவரின் கடிதம் (ம) செலுத்துச்சீட்டு / வங்கி வரைவு

*******

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் எலச்சிபாளையம் வட்டாரம், முசிறி ஊராட்சி சர்வே எண். 123/2A,-ல் 3.025 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற வீட்டுமனைப்பிரிவில் உள்ள விற்பனை செய்யப்படாத மனைகளை முறைப்படுத்திட பார்வை (5)ன் படி நகர் ஊரமைப்புத் உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின்படி ம.வ(வரன்முறை)/நாமா எண். 42/2021, என எண்ணிட்டு கொள்கை அளவிலான மனைப்பிரிவு (In Principal approval of Layout Frame work) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டுமனையிடங்களாக பிரிக்கப்பட்ட 70 மனையிடங்களில் 34 மனையிடங்கள் மட்டும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கும் முன்னரே விற்பனை செய்யப்பட்டுள்ளது. வீட்டுமனைகள் பல்வேறு தேதிகளில் பல்வேறு ஆவண பதிவு வாயிலாக விற்பனை செய்ததன் மூலம் நில உடமை (Title of Ownership) மாறிவிடுவதால் மேற்கண்ட மனையிடங்களை வாங்கியவர் தனியே விண்ணப்பித்து மனையிடத்தை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதால் எஞ்சியுள்ள விற்பனை செய்யப்படாத மனையிடங்களில் பூங்கா / சாலை திறவிடத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம்

1) **பூங்காவின் மொத்தம் பரப்பு= 4323.50 (10.06 %) சதுர அடி**
   **( மனை எண்.14 ,15,16 )**
2) **சாலைகளின் பரப்பு – 29998.00 சதுர அடி**
   **(தானப்பத்திர ஆவண எண். 01/ 2021)**

இதர மனையிடங்களை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற மனைப்பிரிவுகளுக்கான வரைபடத்தினை முழுமையாக பரிசீலனை செய்ததில் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்பனை செய்யப்படாத மனையிடங்களுக்கு தற்போதைய முறைப்படுத்துதல் கட்டணமாக ஒரு சதுர மீட்டருக்கு ரூ.45/– என்ற விகிதத்திலும், வளர்ச்சிக் கட்டணமாக ஒரு சதுரமீட்டருக்கு ரூ.25/– என்ற விகிதத்திலும் பின்வருமாறு கட்டணம் செலுத்தியும், முசிறி ஊராட்சிக்கு தானமாக வழங்க வேண்டிய இடங்களை **தலைவர், முசிறி கிராம ஊராட்சி, எலச்சிபாளையம் வட்டாரம்** என்ற பெயரில் கிராம ஊராட்சிக்கு தானமாக பூங்கா மற்றும் மனைப்பிரிவு சாலைகளை ஒப்படைவு செய்தும் உள்ளார்.

1. கூராய்வுக் கட்டணம் (ரூ.15000/–)
2. .கூராய்வுக் கட்டணம் செலுத்தியுள்ள, DTCP/L/0828636/2017, (DATE:10.02.2021 (மொத்தம் 30) மனைக்கு 15000/– மட்டும் செலுத்தப்பட்டுள்ளது. (Account Holder : Deputy Director of Town and Country Planning, Salem )
3. வரன்முறைக்கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.45/– வீதம் (**4104.06x 45 = 184682.7/-** மனை எண். (மொத்தம் 30) செலுத்தப்பட வேண்டிய வரன்முறைக்கட்டணம் ரூ. **184682.7/–** (இதில் தனியர் செலுத்திய தொகை ரூ. 184696/–) இத்தொகை சலான் எண். **20211210963760**, நாள்– **10.12.2021** கருவூலம், திருச்செங்கோடு–ல் செலுத்தப்பட்டுள்ளது.
4. வளர்ச்சிக்கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/– வீதம் (**4104.06x 25 =102601.5/-** (மொத்தம்30 ) மனைக்கு செலுத்தப்பட வேண்டிய வளர்ச்சிக்கட்டணம் ரூ.110053 (இதில் தனியர் செலுத்திய தொகை ரூ.102609/–)

இத்தொகை முசிறி ஊராட்சியின் வளர்ச்சிக் கட்டணத்திற்கென துவங்கப்பட்ட வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. (வங்கி கணக்கு எண். 6994396393 , இந்தியன் வங்கி, வேலகவுண்டம்பட்டி செலுத்தப்பட்ட நாள் – 10.12.2021).

தற்சமயம் எலச்சிபாளையம் வட்டாரம் முசிறி ஊராட்சி சர்வே எண். 123/2A, -ல் 3.025 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள என்ற அனுமதியற்ற வீட்டுமனைப்பிரிவில் உள்ள விற்பனை செய்யப்படாத மனையிடங்கள் கீழ்க்கண்ட விபரப்படி வரன்முறைப்படுத்த வேண்டியுள்ளது.

| வ.எண். | வரன்முறை செய்யப்படும் மனை எண். | பரப்பளவு (சதுர மீட்டரில்) | செலுத்தப்பட்ட வரன்முறை கட்டணம் (ச.மீக்கு ரூ.45/ வீதம்) | செலுத்தப்பட்ட வளர்ச்சி கட்டணம் (ச.மீக்கு (ரூ.25/ வீதம்) |
|---|---|---|---|---|
| 1 | 8 | 147.07 | 6618.15 | 3676.75 |
| 2 | 9 | 150.21 | 6759.45 | 3755.25 |
| 3 | 10 | 148.12 | 6665.4 | 3703 |
| 4 | 11 | 144.28 | 6492.6 | 3607 |
| 5 | 12 | 141.50 | 6367.5 | 3537.5 |
| 6 | 18 | 133.76 | 6019.2 | 3344 |
| 7 | 19 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 8 | 20 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 9 | 21 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 10 | 22 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 11 | 23 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 12 | 32 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 13 | 33 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 14 | 34 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 15 | 35 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 16 | 37 | 111.52 | 5018.4 | 2788 |
| 17 | 48 | 111.52 | 5018.4 | 2788 |
| 18 | 49 | 111.52 | 5018.4 | 2788 |
| 19 | 50 | 111.52 | 5018.4 | 2788 |
| 20 | 51 | 111.52 | 5018.4 | 2788 |
| 21 | 52 | 175.02 | 7875.9 | 4375.5 |
| 22 | 56 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 23 | 57 | 139.41 | 6273.45 | 3485.25 |
| 24 | 58 | 146.72 | 6602.4 | 3668 |
| 25 | 59 | 139.75 | 6288.75 | 3493.75 |
| 26 | 60 | 138.71 | 6241.95 | 3467.75 |
| 27 | 61 | 137.61 | 6192.45 | 3440.25 |
| 28 | 63 | 136.27 | 6132.15 | 3406.75 |
| 29 | 64 | 138.01 | 6210.45 | 3450.25 |
| 30 | 65 | 135.92 | 6116.4 | 3398 |
| | Total | 4104.06 | 184682.7 | 102601.5 |

2.2021
er :

மேற்கண்ட விபரப்படி விற்பனை செய்யப்படாத 30 மனையிடங்களை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

129

## நிபந்தனைகள்

1. மனைப்பிரிவினை வரன்முறை செய்வதற்கு முசிறி ஊராட்சி பொது ஒதுக்கீட்டிற்கான ஒதுக்கப்பட்ட பூங்கா மற்றும் சாலைப்பரப்பில் தானமாக பத்திர பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவ்விடங்களில் எவ்வித மாற்றங்களும் செய்யக்கூடாது. பத்திர பதிவு செய்யப்பட்ட நாளன்று உள்ள நிலையிலேயே அவ்விடங்கள் இருக்க வேண்டும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை மாற்றி அமைத்தல் கூடாது.
3. வரன்முறை செய்து வழங்கப்படும் மனைப்பிரிவுகளை வீடுகள் மட்டுமே கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் எதுவும் ஏற்படுத்திட அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுபாடுகள் ஏதுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும் பத்திர பதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்தே பத்திரம் பதிவு செய்திடல் வேண்டும்.
6. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.
7. பத்திர பதிவுகள் மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
8. திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனைநிலங்களுக்காக உயர் அழுத்த & சாதாரண மின் அழுத்த மின்சார லைன்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை.
9. கட்டிட வரம்பு – 23 அடி அகல சாலைக்கு 5 அடி விடப்பட வேண்டும்.
10. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரினை வரன்முறைப்படுத்தி வழங்கப்பட்ட உத்தரவால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட வரன்முறை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

**இணைப்பு – மனைப்பிரிவு வரைபடம் – 1**

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
எலச்சிபாளையம் வட்டாரம்.

**பெறுதல்**

13/12/21

திரு.எம்.ராமசாமி த/பெ முத்துசாமி,
4/77 முசிறி, திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

**நகல் –**

1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம், நாமக்கல்
2) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) எலச்சிபாளையம் வட்டாரம் – தகவலுக்காக.
4) ஊராட்சி செயலர், முசிறி ஊராட்சி,எலச்சிபாளையம் வட்டாரம் (தக்க நடவடிக்கைக்காக மற்றும் இருப்புக் கோப்பிற்கு)
5) சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு/வேலகவுண்டம்பட்டி தக்க நடவடிக்கைக்காக.
6) வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு வட்டம் (தக்க நடவடிக்கைக்காக)